# தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்
# தருமபுரி - 635701
# ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

இவ்வொன்றியத்திற்கு தேவையான கீழே குறிபிபட்டுள்ள பணிகளுக்கு மினி லாரி வாகன உரிமையாளர்களிடம் இருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

1. ஒப்பந்த காலம் 01.08.2022 முதல் 31.07.2025 வரை.

## அ) தருமபுரி மாவட்ட தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களின் பால் வழித்தடங்கள்

| வ.எண் | பால் வழித்தடத்தின் பெயர் | வழித்தடம் | தோராய கி.மீ நாளொன்றுக்கு | வாகன கொள்ளளவு (in MT) |
|---|---|---|---|---|
| 1 | நெருப்பூர் | I | 76 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| | | II | 114 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 2 | ஏரியூர் | I | 64 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| 3 | நல்லாம்பட்டி | I | 76 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 4 | இண்டூர் | I | 84 | 1.5 MT முதல் 2.0 MT வரை |
| | | II | 92 | 1.0 MT முதல் 1.5 MT வரை |
| 5 | இலளிகம் | I | 74 | 1.5 MT முதல் 2.0 MT வரை |
| | | II | 46 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 6 | சாமிசெட்டிப்பட்டி | I | 70 | 1.0 - MT முதல்1.5 MT வரை |
| | | II | 158 | 1.5 MT முதல் 2.0 MT வரை |
| 7 | P.கொல்லஅல்லி | I | 112 | 1.5 MT முதல் 2.0 MT வரை |
| | | II | 102 | 1.5 MT முதல் 2.0 MT வரை |
| 8 | S. நல்லாம்பட்டி | I | 82 | 1.0 - MT முதல்1.5 MT வரை |
| | | II | 122 | 1.0 MT முதல் 1.5 MT வரை |
| 9 | H. ஈச்சம் பாடி | I | 96 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| 10 | வேப்பம் பட்டி | I | 106 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| 11 | கீரைப்பட்டி | I | 68 | 1.5 MT முதல் 2.0 MT வரை |
| 12 | கோட்டப்பட்டி | I | 70 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 13 | தம்பிசெட்டிப்பட்டி | I | 76 | 1.0 MT முதல் 1.5 MT வரை |
| 14 | கொண்டயம்ப்பட்டி | I | 58 | 1.0 MT முதல் 1.5 MT வரை |
| 15 | புதுப்பட்டி | 1 | 58 | 1.0 MT முதல்1.5 MT வரை |
| 16 | இராமியணஹள்ளி | 1 | 78 | 1.0 MT முதல்1.5 MT வரை |
| 17 | எருமியாம்பட்டி | I | 54 | 1.0 MT முதல்1.5 MT வரை |
| | | II | 46 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 18 | பையர்நத்தம் | I | 84 | 1.0 MT முதல்1.5 MT வரை |
| | | II | 62 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 19 | இராமியம்பட்டி | I | 108 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| | | II | 94 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| 20 | தாதனூர்புதூர் | I | 74 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| | | II | 128 | 1.0 MT முதல் 1.5 MT வரை |
| 21 | சின்னேரிமோட்டுப்பட்டி | I | 74 | 1.5 MT முதல் 2.0 MT வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | II | 86 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| 22 | பெரமாண்டப்பட்டி | I | 52 | 0.7 MT முதல் 1.0 MT வரை |
| | | II | 120 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| 23 | சொர்ணம்பட்டி 1 & 2 | I | 56 | 1.0 MT முதல் 1.5 MT வரை |
| | | II | 68 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| | | III | 86 | 2.0 MT முதல் 2.5 MT வரை |
| 24 | B.மல்லாபுரம் | I | 82 | 2.0 MT முதல் 2.5 MT வரை |

**ஆ) உள்ளூர் பால் விற்பனை பிரிவு தருமபுரி:**

| வ.எண் | வழித்தடத்தின் பெயர் | வாகனத்தின் கொள்ளளவு (MT) | வண்டிகள் | தோராய கி.மீ நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|
| 1 | ஒகேனக்கல் | 1.5 | 1 (Puff van) | 245 கி.மீ |

கிராமபுற பால்வழித்தட மற்றும் ஒகேனக்கல் உள்ளூர் பால் விற்பனை வாகனங்கள் 2010 - ம் ஆண்டு மற்றும் அவ்வாண்டிற்கு பிறகு உள்ள மாடலாக இருத்தல் வேண்டும்.

பொது மேலாளர்

## ஒப்பந்தப்படிவம் பெறும் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்த படிவம் பெறும் இடம் | தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தருமபுரி. |
| 2 | ஒப்பந்தபடிவத்தின் விலை | ரூ.200.00 (வரிகள் உட்பட) |
| 3 | ஒப்பந்த புள்ளி படிவம் வழங்கும் நாள் மற்றும் நேரம். | செய்தித்தாளில் விளம்பரம் வந்த தேதி முதல் 28.06.2022 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. |
| 4 | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தபுள்ளி படிவம் சமர்பிக்க கடைசி நாள் | 29.06.2022 மதியம் 2.00 மணி வரை |
| 5 | ஒப்பந்த படிவம் திறக்கப்படும் இடம் நாள் மற்றும் நேரம். | நிர்வாக அலுவலகம் த.மா.கூ.பா.உ. ஒன்றியம் தருமபுரி நாள் 29.06.2022 நேரம் மதியம் 3.00 மணி அளவில் |
| 6 | ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய வங்கி வரைவோலை (DD) எழுத வேண்டிய முகவரி | Demand Draft in favour of " The General Manager, DDCMPU Ltd., Dharmapuri " Payable at Dharmapuri. |
| 7 | முன் வைப்பு தொகை (EMD) லாரி கொள்ளளவு 2.0 டன் முதல் 2.5 டன் வரை | ரூ. 7500/- |
| 8 | 0.750 முதல் 1.5 டன் வரை MT லாரி முன் வைப்பு தொகை (EMD) | ரூ. 5000/- |

**இதர விவரங்கள்:**

ஓவ்வொரு வழித்தடத்திற்க்கும் தனித்தனியாக ஒப்பந்த விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்த புள்ளி இரண்டு கவர் முறைக்கு உட்பட்டது (Two Cover system). 1) தொழில் நுட்ப விபரங்கள- Technical Bid மற்றும் 2) ஒப்பந்தப்புள்ளி படிவம் - Commercial Bid-களை தனி தனி கவர்களில் தயார் செய்து 2 கவர்களும் ஒரு பெரிய கவரில் வைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்த படிவத்திற்காக பெறப்பட்ட டேவணித்தொகை வங்கி வரைவோலையாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். பிணையத்தொகை காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ ஏற்று கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த படிவம் பெறுவதற்கு விண்ணப்பதாரர் தமது வாகனத்தின் ஆர்.சி புத்தகம், பர்மிட், இன்சூரன்ஸ் மற்றும் சாலை வரி போன்ற அசல் (Originals) எடுத்துவந்து ஒன்றிய மேலாளர் (போக்குவரத்து) அவர்களால் வாகனம் தொடர்பான அனைத்து விவரங்களையும்

சரிபார்க்கப்பட்ட பின்னரே தகுதி இருப்பின் ஒப்பந்த படிவம் வழங்கப்படும். Technical bid திறக்கும் போது தஸ்தாவேஜிகள் Original அனைத்தும் மேலாளர் (போக்குவரத்து) மற்றும் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் கண்டிப்பாய் சமர்ப்பிக்க வேண்டும். உண்மை நகல்கள் கொண்டு வராத மற்றும் சமர்ப்பிக்காத விண்ணப்ப்ங்கள் நிராகரிக்கப்படும்.

பிணையத் தொகை (EMD) இணைக்கப்படாத ஒப்பந்த புள்ளிகள் மற்றும் உரிய முறையில் விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்த புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் 29.06.2022 அன்று மாலை 3.00 மணியளவில் இவ்வலுவலகத்தில் ஒப்பந்தம் கோருபவர்கள் முன்னிலையில் குழு உறுப்பினர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். அன்று அரசு விடுமுறை நாளாக இருந்தால் அடுத்த நாள் மற்றும் நேரம் மாற்றம் இன்றி டெண்டர் படிவங்கள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் எவ்வித காரணமின்றி எந்த ஒரு ஒப்பந்த படிவத்தையும் ஏற்றுக்கொள்ளவும், நிராகரிக்கவும், ஒத்தி வைக்கவும் பொது மேலாளாருக்கு முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்த படிவத்தை www.tender.tn.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக (டவுன்லோடு) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வாகனங்களின் அனைத்து சான்றுகளும் நடைமுறையில் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவை இணைய தளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தங்கள் வாகனங்களின் உண்மையான தஸ்தாவேஜிகளை இவ்வொன்றிய மேலாளர் (போக்குவரத்து) அவர்களிடம் வழங்கி சரிபார்க்கப்பட்டு அவர் வழங்கும் தகுதிச் சான்றிதழை ஒப்பந்த படிவத்துடன் (Techinal Bid ) கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

பொது மேலாளர்

## படிவம் : 1

## ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கைகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர், பதவி, முகவரி | பொது மேலாளர், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கிருஷ்ணகிரி மெயின் ரோடு, தருமபுரி. |
| 2 | திட்டத்தின் பெயர், பால் கொள்முதல் விவரம் | 2022-2025 மூன்று ஆண்டுகளுக்கான தருமபுரி மாவட்டத்தில் கிராமப்புற கிளைச்சங்கங்களிலிருந்து இருந்து பால் சேகாரம் செய்து தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்களுக்கு கொண்டுவந்து சேர்த்தல், உள்ளூர் பால் விற்பனை பயன்படுத்துதல் (01.08.2022 முதல் 31.07.2025 வரை) |
| 3 | பணி அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டத்தின் பெயர் | தருமபுரி மாவட்ட முழுமைக்கும். |
| 4 | எந்த இடத்தில், எந்த தேதி, என்ன விலைக்கு ஒப்பந்தப் புள்ளி சம்மந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விவரம் | பொது மேலாளர், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தருமபுரி நிர்வாக அலுவலகத்தில் செய்தித்தாளில் விளம்பரம் வந்த தேதி முதல் 28.06.2022 பிற்பகல் 4.00 மணி வரை படிவத்தின் விலை ரூ.200 /-(வரிகள் உட்பட) |
| 5 | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை | பால் சேகாரம் செய்யும் 2.0 டன் முதல் 2.5 டன் வரை உள்ள போக்குவரத்து வாகனத்திற்கு முன் வைப்பு தொகை (EMD) ரூ.7,500.00 மற்றும் 0.75 டன் முதல் 1.5 டன் வரை உள்ள மினி லாரி வாகனத்திற்கு முன்வைப்பு தொகை ரூ.5,000.00 வங்கி வரையோலை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் |
| 6 | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள், நேரம் மற்றும், இடம். | நிர்வாக அலுவலகம், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள். ஒன்றியம், தருமபுரி 29.06.2022 பிற்பகல் 2.00 மணி வரை |
| 7 | பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம். | நிர்வாக அலுவலகம், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள், ஒன்றியம், தருமபுரி, 29.06.2022 பிற்பகல் 3.00 மணி அளவில் |

ஒம்/Dr.K.K.வசந்தகுமார்
பொது மேலாளர்

பொது மேலாளருக்காக

# தொகுப்பு பால் குளிர்விப்பு மைய பால் வழித்தடம்/ உள்ளூர் பால் பால் விற்பனை வழித்தடம் விண்ணப்ப படிவம்

**தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்**

வட்டார வளர்ச்சி காலணி, கிருஷ்ணகிரி மெயின்ரோடு தருமபுரி. - 636701.

பகுதி -1

தொழில் நுட்ப விபரங்கள் (Technical Bid)
தொகுப்பு பால் குளர்விப்பு மைய மற்றும் உள்ளூர் பால் விற்பனை வழித்தட
ஒப்பந்தபுள்ளி படிவம்

------------------------------------------------------------------------------------------------

**அனுப்புதல்**

**பெறுதல்**

பொது மேலாளர்
தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்
தருமபுரி- 635701 (தருமபுரி மாவட்டம் ) தமிழ்நாடு.

**ஐயா,**

நான் ஒப்பந்தம் கிடைத்தவுடன் உடனடியாக எனது வண்டியை பால் சேகரம் செய்ய தொகுப்பு பால் குளர்விப்பு மைய மற்றும் உள்ளூர் பால் விற்பனை வழித்தட ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வழித்தடத்தில் ஓட்ட சம்மதிக்கிறேன். ஓப்பந்தம் கிடைத்த பத்து நாட்களுக்குள் ஒப்பந்த உடன்படிக்கை பத்திரம் ரூ.50/- மதிப்புள்ள (N.J.S Paper) முத்திரைத்தாளில் தட்டச்சு செய்து வழங்க சம்மதிக்கிறேன். மேலும் நான் செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை (EMD)ஐ காப்புத் தொகையாக மாற்ற சம்மதிக்கிறேன்.

மேலும் ஒன்றிய ஒப்பந்த விதிகளின்படியும் ஒன்றியத்தால் இயற்றப்பட்ட அனைத்து சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு ஒப்பந்த காலம் முழுமையாக வண்டியை ஓட்ட சம்மதிக்கிறேன்.

**ஒப்பந்ததாரர்**
**கையொப்பம்**

**தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்**
தருமபுரி. வட்டார வளர்ச்சி காலணி, கிருஷ்ணகிரி மெயின்ரோடு - 636701.

ஒன்றியத்தின் ......................................... வழித்தடத்தில் 2022-2025 ம் ஆண்டிற்கு ஒப்பந்த ஆணை வழங்கும் தேதி 01.08.2022 முதல் 31.07.2025 முடிய பால் சேகரிப்பு மற்றும் உள்ளூர் பால் விற்பனை பிரிவு பணிக்கான ஒப்பந்த புள்ளி படிவம்

## தொழில் நுட்ப விபரங்கள் (Technical Bid)
## பால் சேகரிப்பு / உள்ளூர் பால் விற்பனை பிரிவு வழித்தடம்

| | | |
|---|---|---|
| 1. | வாகன உரிமையாளரின் பெயர் | |
| 2. | உரிமையாளரின் அஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண் | |
| 3. | வாகனத்தின் பதிவு எண் / ஆண்டு | |
| 4. | வாகனத்திற்கு F.C உரிமம் எந்த தேதி வரை உள்ளது? | |
| 5. | வாகனத்திற்கு எந்த நாள் வரை சாலை வரி செலுத்தப்பட்டுள்ளது? | |
| 6. | வாகனத்திற்கு எந்த நாள் வரை காப்பீடு செய்யப்பட்டுள்ளது | |
| 7. | வாகனத்திற்கு எந்த தேதி வரை உரிமம் உள்ளது (Permit) | |
| 8. | வாகனத்தின் கொள்ளளவு | |
| 9. | முன் வைப்புத் தொகை (EMD) செலுத்தியற்கான விபரம் | |
| | கேட்பு வரைவோலை எண் / நாள் | |
| | வங்கி விபரம் | |

என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகிறேன்.

**குறிப்பு:** டெக்னிக்கல் பிட்டில் இணைக்கப்பட வேண்டியவை

1) வாகன தஸ்தாவேஜ்கள்(Documents)
2) வங்கி வரைவோலை

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்**
தருமபுரி. வட்டார வளர்ச்சி காலணி, கிருஷ்ணகிரி மெயின்ரோடு - 636701.

ஒன்றியத்தின் ........................................ வழித்தடத்தில் 2022-2025 ம் ஆண்டிற்கு ஒப்பந்த ஆணை வழங்கும் தேதி 01.08.2022 முதல் 31.07.2025 முடிய பால் சேகரிப்பு மற்றும் உள்ளூர் பால் விற்பனை பிரிவு பணிக்கான ஒப்பந்த புள்ளி படிவம்

## பகுதி II

## வாடகை கட்டணம் குறிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் (Commercial Bid)

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. வழித்தடத்தின் பெயர் :
3. விண்ணப்பதாரரின் அஞ்சல் முகவரி :
4. வாகனத்தின் பதிவு எண் ( பதிவு சான்றிதழ்) :
5. கோரும் விலைப்புள்ளி ( கி.மீ ஒன்றுக்கு) :

**எண்ணால் :**

**எழுத்தால் :**

என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகிறேன்.

**குறிப்பு:** கமர்ஷியல் பிட்டில் இணைக்கப்பட வேண்டியவை

1) விலைப்புள்ளி

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

# தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், தருமபுரி

தொகுப்பு பால் குளிர்விப்பு மைய பால் வழித்தட வாகனம் / உள்ளூர் பால் விற்பனை பிரிவு வழித்தடங்களுக்கு ஒப்பந்தம் 2022-25

## வாகன தகுதி சான்றிதழ்

1. வாகனத்தின் உரிமையாளர் பெயர் :
2. வாகனத்தின் பதிவு எண் மற்றும் ஆண்டு:
3. வாகனத்தின் கொள்ளளவு :
4. வண்டி FC உரிமம் எந்நாள் வரை :
5. வண்டியின் சாலை வரி (Road Tax) எந்நாள் வரை :
6. வண்டியின் காப்பீடு (Insurance ) எந்நாள் வரை :
7. வண்டியின் உரிமம் ( Permit) எந்நாள் வரை :

மேற்கண்ட வாகனத்தின் உண்மை நகல்களை சரிபார்க்கப்பட்டது

**மேலாளர் ( போக்குவரத்து )**
**ஆவின், தருமபுரி**

**குறிப்பு :**

இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்யும் விண்ணப்பதாரர்கள் கட்டாயம் இந்த வாகன தகுதி சான்றிதழை மேலாளர் (போக்குவரத்து) ஆவின் தருமபுரி அவர்களிடம் ஒப்புதல் பெற்று தாங்கள் சமர்பிக்கப்படும் தொழில் நூட்ப படிவத்துடன் (Technical Bid) இணைக்கப்பட வேண்டும்.

**தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்**

தருமபுரி. வட்டார வளர்ச்சி காலனி, கிருஷ்ணகிரி மெயின்ரோடு - 636701.

போன் : 04342-268484

**தொகுப்பு பால் குளிர்விப்பு மைய பால் வழித்தட வாகனம் / உள்ளூர் பால் விற்பனை பிரிவு வழித்தடங்களுக்கு ஒப்பந்தம் 2022-25 ஒப்பந்த விதிமுறைகள்.**

1. ஒப்பந்த காலம் 2022-25 முடிய மூன்று ஆண்டு காலத்திற்கு ஆகும்.

2. ஒப்பந்தக்காரர் ரூபாய் 50/- பெருமானமுள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்த உடன்படிக்கையின் விதிமுறைகளை தட்டச்சு செய்து, கையொப்பமிட்டு, ஒப்பந்தம் வழங்கப்பட்ட பத்து தினங்களுக்குள் இவ்வொன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும். இதன் பின்னர் தான் போக்குவரத்து பட்டியல் அனுமதிக்க இயலும்.

3. ஒப்பந்ததாரர் இவ்வொன்றியத்தில் ரூபாய் 10/- செலுத்தி இணை உறுப்பினராக (Associate Member) சேர வேண்டும். இவ்வாறு உறுப்பினராகும் ஒப்பந்ததாரருக்கு, இவ்வொன்றிய தேர்தலில் வாக்களிக்கும் உரிமையோ ஒன்றிய லாபத்தில் பங்கோ வழங்கப்பட மாட்டாது. இத்தொகை எக்காரணம் கொண்டும் திரும்பி வழங்கப்படமாட்டாது.

4. மினி லாரி ஒப்பந்தம் கோரும் போது கீழ்க்கண்டவாறு முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

| | முன் வைப்புத் தொகை (EMD) |
|---|---|
| 2.0 டன் முதல் 2.5 டன் வரை | ரூ.7,500.00 |
| 0.75 டன் முதல - 1.5 டன் வரை | ரூ.5,000.00 |

மூடி முத்திரையிடப்பட்ட தொழில் நூட்ப விபரங்கள் (TECHNICAL BID) விண்ணப்ப படிவத்துடன் முன் வைப்புத் தொகையை வரை வோலையாக செலுத்த வேண்டும். ஒப்பந்தம் கிடைக்கப் பெற்றப் பின்னர் மீதம் செலுத்த வேண்டிய காப்புத் தொகை போக்குவரத்து கட்டண பட்டியலில் இருந்து சம தவணையில் பிடித்தம் செய்து கொள்ளப்படும். மேலும் தங்களின் செயல்பாட்டினை முழுமையாக ஊர்ஜிதப்படுத்தும் பொருட்டு வைப்புத் தொகையாக (Performance Deposit ) ஒவ்வொரு போக்குவரத்து பட்டியலுக்கு ஏற்ப 1% பிடித்தம் செய்யப்படும். இத்தொகை திருப்தியான ஒப்பந்த காலத்தை முடித்திருக்கும் ஒப்பந்ததாராருக்கு இறுதிப்பட்டியலுடன் சேர்த்து வழங்கப்படும்.

5. ஒப்பந்ததாரர் செலுத்தும் முன் வைப்புத் தொகை (EMD) மற்றும் பிணையத் தொகைக்கு (SD) வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

6. ஒன்றிய ஒப்பந்த விதிமுறைகளை, ஒப்பந்ததாரர் பின்பற்றாமல் செயல்பட்டாலும், ஒன்றியம் மற்றும் சங்க சொத்துகளுக்குத் சேதம் மற்றும் இழப்பு

ஏற்படுத்தினாலும் காப்புத் தொகை மற்றும் இதர தொகையில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ நட்டத்திற்கு ஏற்ப ஈடு செய்யப்படும் மேலும் உடனடியாக ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

7. ஒப்பந்ததாரர் ஒன்றியம் அங்கீகரித்துள்ள தடத்தின் வழியிலும்/ ஒன்றிய அலுவலரால் சுட்டிக்காட்டப்படும் வழியில் மட்டுமே, ஒப்பந்த வாகனத்தை இயக்க வேண்டுமெ. மேலும் ஒன்றியம் வரையறை செய்துள்ள தடத்தில், குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் சென்றடைய வேண்டும்.

8. அங்கீகரிக்கப்பட்ட பால் சேகரிப்பு மற்றும் கால்நடை மருத்துவ வழித்தடங்களை நீட்டிக்கவும் குறைக்கவும், தடத்தை மாற்றி அமைக்கவும் அல்லது ரத்து செய்யவும் ஒன்றியத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

9. மோட்டார் வாகன சட்டத்திற்கு உட்பட்டு தேவைப்படும் ஆவணங்கள் டிரிப்சீட் பராமரிப்பு மற்றும் இதர அனைத்து ஆவணங்களை பராமரிப்பது முழு பொறுப்பும் ஒப்பந்ததாரரையே சாரும். இதில் அரசின் / போக்குவரத்து அலுவலரின் எவ்வித மேல் நடவடிக்கைக்கும் ஒன்றியம் பொறுப்பேற்காது.

10. வாகனத்தின் உதிரி பாகங்கள் விலை உயர்வு டயர் விலை உயர்வு, வாகன வரி உயர்வு ஆகிய விலை உயர்வுகள் ஏற்பட்டாலும் அங்கீரிக்கப்பட்ட வாடகை உயர்த்த்ப்படமாட்டது.

11. ஒப்பந்ததாரருக்கும், சங்கங்களுக்கும் மேற்படி ஒன்றியத்திற்கும் இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்கு பொது மேலாளர் தீர்ப்பே இறுதியானது.

12. ஒப்பந்ததாரர் தமது வாகனங்களுக்கு குறைந்தபட்சம் மூன்றாமவர் காப்பீடு (Third Party Insurance) செய்யப்பட்டிருக்க வேண்டும்.

13. மோட்டார் வாகன விதிகளின் படி சொந்த வாகனம் (Personal Taxi) பயன்படுத்தக்கூடாது. அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவர்.

14. அமலில் உள்ள விதிகளின் படி வருமானவரி மற்றும் இதர வரிகள் ஒவ்வொரு போக்குவரத்துக் கட்டண பட்டியலிலும் பிடித்தம் செய்யப்படும்.

15. போக்குவரத்துக் கட்டண பட்டியலை ஒப்பந்ததாரர் 1 முதல் 15ம் தேதி வரையும், 16ம் தேதி முதல் மாத இறுதி வரை ஆக மாதமிருமுறை பட்டியல்கள் மூன்று நகல்களுடன் ட்ரிப்சீட் இணைத்து உரிய அலுவலரின் பரிந்துரையுடன் 5 தினங்களுக்குள் இவ்வொன்றியத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

16. பொது வேலை நிறுத்தம் நடைபெறும் நாட்களில் ஒப்பந்ததாரருக்கு எவ்வித இழப்பு ஏற்பட்டாலும் ஒன்றியம் எவ்வித நட்ட ஈடு தொகையும் வழங்காது.

17. ஒப்பந்த காலத்தை நல்ல முறையில் இயக்கி முடித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் முடிந்த பின் தங்களின் காப்புத் தொகையில் 50 முதல் 75 சதவீகிதம்

வழங்கப்படும். மீதமுள்ள தொகை ஒன்றியத்தின் தணிக்கை முடிந்த பிறகு திருப்பி வழங்கப்படும்.

18. ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலம் முடிந்தவுடன் ஒப்பந்தம் சார்ந்துள்ள அலுவலரிடம் நிலுவையில்லாச் சான்று (No Due Certificate) பெற்று ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும். இதன் பிறகு கடைசி போக்குவரத்து கட்டணம் அனுமதிக்கப்படும்.

19. நிர்வாக காரணங்களுக்காக எவ்வித முன் அறிவிப்புமின்றி ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

20. ஒப்பந்த வண்டி ஒப்பந்த காலத்தில் தார் பாலினால் நன்கு மூடப்பட்டு இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அன்றைய தினத்தில் பால் கெட்டுப் போனால் அதற்குண்டானத் தொகையைத் ஒப்பந்ததாரரின் பட்டியலிருந்து பிடித்தம் செய்துக் கொளள்ப்படும். இது தவிர நாள் ஒன்றுக்கு ரூ.100/- அபாரதம் விதிக்கபடும.

21. ஒப்பந்ததிலிருந்து முன் அறிவிப்பு ஏதுமின்றி திடிரென ஒப்பந்த வண்டியை நிறுத்திக் கொண்டால் ஒன்றியத்தின் ஒப்பந்த விதிமுறைகளை ஒப்பந்தாரர் செயல்படுத்தாமைக்காக ஒப்பந்தம் ரத்து செய்து கீழ் காணும் விதிமுறைகளை ஒன்றியம் பின்பற்றும்.

22. (அ) அனைத்து வைப்புத் தொகைகளும் பறிமுதல் செய்யப்பட்டு ஒன்றியக் கணக்கில் சேர்பிக்கபடும்.

(ஆ) நிலுவையிலுள்ள அனைத்து போக்குவரத்துக் கட்டணங்களும் முடக்கி வைக்கப்படும்.

(இ) மாற்று வாகனம் ஏற்பாடு செய்யாத வகையில் இவ்வொன்றியத்திற்கு ஏற்படும் அதிகப்படியான செலவுகள் அனைத்தும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23. ஒப்பந்த வண்டியின் தொலைவு காட்டும் கருவி ( Speed Metre ) சரியாக இயங்க வேண்டும். தொலைவு காட்டும் கருவி இயங்காத நிலையில் வண்டியில் பயணம் செய்யும் ஒன்றிய அலுவலர் தெரிவிக்கும் அடிப்படையில் மட்டுமே போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்படும்.

24. ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனத்தில் ஒன்றியத்தின் பால் சேகரிப்புத் குழு / கால்நடை மருத்துவ பிரிவு / அவசர சிகிச்சைப்பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தெரிவிக்கும் பொருட்களை எவ்வித நிபந்தனையின்றி எடுத்துச் சென்று உரிய இடத்தில் சேர்க்க வேண்டும்.

25. ஒன்றிய அலுவலர்கள் குறிப்பிடும் இடத்தில், குறிப்பிடும் நேரத்தில் ஒப்பந்தாரர் தமது வாகனத்தை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்த வாகனத்திற்கு பதிலாக மாற்று வாகனம் அமர்த்தப்பட அதே பணிக்காக பயன்படுத்தும் போது மாற்று வாகனம் அமர்த்த செலவிடப்பட்ட அதிகப்படியான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

26. ஒப்பந்த வண்டி பழுந்தடைந்தாலோ, விபத்துக்குள்ளானாலோ, தகுதி சான்று (F.C) பெற வேண்டி இருந்தாலோ ஒப்பந்தாரர் முன் அனுமதி பெற்று தம் பொறுப்பில் மாற்று வாகனம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அவ்வாகனம் ஒப்பந்த சரத்துக்களின் படி இருக்க வேண்டும்.

27. மாற்று வாகனம் பயன்படுத்துவதற்கு ஒன்றியத்தின் முன் அனுமதியை ஒப்பந்தாரர் பெற வேண்டும். அதிக அளவில் 15 தினங்களுக்கு மட்டும் மாற்று வாகனம் பயன்படுத்த அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் போக்குவரத்து கட்டண பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரர் வாகனம் விபத்துக்குள்ளாகும் போது மாற்று வண்டி ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து இயக்க வேண்டும். தவிர்க்க இயலாத சூழ்நிலையில் அவசரம் அவசியம் கருதியும், உற்பத்தியாளர்கள் நலன் கருதியும் ஒன்றியமே விலைப்புள்ளி அடிப்படையில் வாகனம் இயக்கும்பொழுது ஒப்பந்த வாடகைக்கு கூடுதலாக செலவிடப்படும் தொகை ஒன்றியம் ஏற்கும்.

28. ஒன்றிய பணிக்காக வண்டி ஓடிக்கொண்டிருக்கும் போது, வண்டியில் வெளி ஆட்களையோ ஒன்றியம் அனுமதிக்காத பொருட்களையோ ஏற்றக்கூடாது. இவ்வாறு செய்தால் அன்றைய வாடகை ரத்து செய்யப்படும்.

29. ஒப்பந்தாரரின் ஒப்பந்த வாகனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும், நிரந்தரம் (அ) தற்காலிகமாகவோ குறைந்த பட்சமாக ஒரு நாள் ஊதியம் பெற்றவராயினும் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். என்பது சட்டபூர்வமானதாகும் ஒப்பந்ததாரர் வாகனத்தில் பணிபுரியும் ஓட்டுனர் மற்றும் பிறபணியாளர்களின் ஈ.பி.எப் மற்றும் ஈ.எஸ்.ஐ ஆகியவைகளை ஊதியத்தில் பிடித்தம் செய்த விபரங்களுடன் அப்பணியாளர்களின் பெயர், முகவரி, பிறந்த தேதி, ஆதார் எண், வங்கி கணக்கு விவரம் மற்றும் அவர்களுக்கு வழங்கும் மாத ஊதிய விபரம் ஆகிய விவரங்கள் மற்றும் EPF / ESI செலுத்தியற்கான சலான் விபரங்கள் அந்தந்த மாத பட்டியலுடன் இணைந்து அனுப்பிய பின்னரே பட்டியல் தொகை வழங்கப்படும்.

30. அங்கீகரிப்பட்ட வாகனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மாநில காப்பீட்டு திட்டப்பிரிவு 40(1) மற்றும் (3) எங்கெல்லாம் அமல்படுத்தப்படுகிறதோ, அங்கெல்லாம் மேற்படி திட்டத்தின் கீழ் கொண்டு வந்து மாதாமாதம் அதற்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும். அனைத்து வழித்தடங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் பாலிசி எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒன்றியமே போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்து செலுத்தும்.

31. டெண்டர்தாரருக்கு ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு அல்லது குறைவு ஏற்படும் போது ஒப்பந்த காலத்தில் அனுமதிக்கப்பட்ட வாடகை விகிதத்தை உயர்த்தியோ, குறைத்தோ வழங்கப்படும்.

32. மேற்படி ஒப்பந்த விதிகள், தமிழ்நாடு ஒளிமறைவற்ற ஒப்பந்தம் 1998 ம் ஆண்டு சட்டம் 43 (Act) அதை தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் (Rules) ஆகியவற்றிற்கு உட்பட்டதாகும்.

33. ஒவ்வொரு வழித்தடத்திற்கும் தனித்தனி ஒப்பந்த புள்ளி விண்ணப்ப படிவம் பெறுதல் வேண்டும்.

34. ஒவ்வொரு முறையும் பால் இறக்குதல் பாதுகாவலர் மற்றும் ஊழியர்களால் பால் வண்டியின் வருகை மற்றும் வெளியே செல்லும் நேரங்கள் பதிவு செய்து கொள்ளப்படும். வரையறுக்கப்பட்ட நேரத்தை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

35. பால் சேகரம் செய்யும் வண்டிகள் தார்பாலினால் முழுவதும் மூடப்பட்டிருக்க வேண்டும். எந்தந்த இடங்களில் பாலினை சேகாரம் செய்ய வேண்டும். பால் சேகரம் செய்ய வேண்டிய நேரம் மற்றம் பால் குளீரூட்டும் நிலையங்கள்/ பால் பண்ணையில் கொண்டு சேர்க்க வேண்டிய நேரம், ஒவ்வொரு பால் சேகாரம் செய்யும் இடங்களுக்கும் இடைப்பட்ட தூரம் ஆகிய விபரங்கள் அடங்கிய அட்டவணையானது ஒப்பந்தாராருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் வழங்கப்படும், ஒன்றியம் அளித்த அட்டணைப்படி காலையிலும் மாலையிலும் பாலினை சேகரம் செய்வதில் தவறுதல் கூடாது. தவறும் பட்சத்தில் அன்றைய நாளின் போக்குவரத்துக் கட்டணம் முழுவதும் பிடித்தம் செய்துக் கொள்ளப்படும். பால் குளிரூட்டும் நிலையங்கள் / பால் பண்ணையில் பாலை இறக்கவோ அல்லது ஏற்றிச் செல்லவோ அட்டவணைப்படி இல்லாமல் காலதாமதமாக வண்டியை கொண்டு வந்தால் அன்றைய நாளில் கெட்டுப் போகும் பாலுக்குரிய தொகையை வண்டியின் வாடகை பணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

36. ஒப்பந்ததாரர் தனது சொந்த ஆட்களை கொண்டு, சங்கங்களிலிருந்து பால் கேன்களை ஏற்றுவதும் பால் குளிரூட்டும் நிலையங்கள் /பால் பண்ணையில் இறக்கவும் செய்ய வேண்டும்.

37. நிர்வாக காரணங்களுக்கான ஒப்பந்த காலத்தை நீட்டிக்கவோ, குறைக்கவோ, பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. ஒப்பந்த காலம் முடிந்த பிறகு மேலும் மூன்று மாத காலம் அல்லது அடுத்த ஒப்பந்தம் நடைபெறும் வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. மேலும் ஒப்பந்ததாரர் தொடர்ந்து ஒன்றியத்திற்கு நட்டம் ஏற்படுத்துவாரேயானால் அவருடைய ஒப்பந்தம் ரத்து செய்வதுடன் ஒன்றியத்திற்கு ஏற்பட்ட அனைத்து நட்டமும் வசூலிக்கப்படும்.

38. புதிய சங்கங்களை ஆரம்பித்தல் ஒரு பால் வழித்தடத்தில் உள்ள சங்கத்தை பிரித்தல் இணைத்தல் நீக்குதல், பால் வழித்தடத்தை மாற்றி அமைத்தல் போன்ற காரணங்களால் பால் வழித்தடத்தின் தூரம் நிலையாக இல்லாமல் மாறி வரும் அவ்வாறான சமயங்களில் ஒப்பந்ததாரர் தனது வண்டியை ஓட்ட தயார் நிலையில் இருக்க வேண்டும். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள தூரத்தை தவிர அதிகப்படியான தூரத்திற்கு வண்டியை இயக்க நேரிட்டால் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்ட விலைப்புள்ளி தொகைத்தான் அளிக்கப்படும். இந்த நிபந்தனை பால் வழித்தடம் மாற்று ஏற்பாட்டின் போதும் பொருந்தும்.

39. ஒன்றியம் அவ்வப்போது அறிவிக்கும் வகையில் வண்டியின் வண்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும். குழிகள் இல்லாத அடித்தளத்தை கொண்டிருக்க வேண்டும் ஒன்றியம் அவ்வப்போது வழங்கும் கடிதம் ஆவணங்கள் பால் பரிசோதனை பொருட்கள் தீவனங்கள் மற்றும் உறைவிந்து குச்சி முதலியவைகளை குறிப்பிட்ட இடங்களில் எந்த விதமான சேதாரமும் இன்றி கொண்டு சேர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்ய மறுத்தால் அது ஒப்பந்த உடனபடிக்கையை மீறியதாக கருதி ஒப்பந்தம் முடிவு செய்துக் கொள்வதோடு காப்புத்தொகை பிடித்தம் செய்துக் கொள்ளப்படும்.

40. பால் வழித்தடத்தில் பால் வழித்தடம் பழுதடைந்து நின்று விட்டாலோ ஓட்ட முடியாத நிலையில் இருந்தாலோ அவசரம் கருதி தற்காலிமாக மாற்று வண்டியை ஏற்பாடு செய்துக் கொள்வது ஒப்பந்தாரரின் பொறுப்பாகும். மாறாக இவ்வொனிறியம் எவ்விதமான ஏற்படும் செய்ய இயலாது.

41. வண்டியின் காலதாமதத்தால் பால் கெட்டுப்போனாலோ, அல்லது சேகரம் செய்யாமல் வந்தாலோ அந்த பாலுக்குண்டானத் தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

42. பால் குளிரூட்டும் நிலையங்கள் / பால் பண்ணைக்கும் தாமதமாக வரும் வண்டியினால் கெட்டுப்போன பாலின் தரத்தை மாற்ற ஒப்பந்ததாரர் முயற்சித்தால் அவரின் ஒப்பந்த உடன்படிக்கை முடிவு செய்து கொள்ளப்படுவதுடன் நிலுவை போக்குவரத்து கட்டணத்துடன் காப்புத் தொகையும் சேர்த்து பிடித்தம் செய்துக் கொள்ளப்படும்.

43. ஒப்பந்த முடிவு செய்யும் தருவாயில் இவ்வொன்றியத்தில் ஒப்பந்ததாரரின் கடந்த கால வியாபார உறவு கருத்தில் கொள்ளப்படும். இதில் பொது மேலாளரின் முடிவே இறுதி ஆனது ஆகும்.

44. ஒன்றியம் அவ்வப்போது அறிவிக்கும் அறிவுரைகளை பால் வண்டியின் ஓட்டுனர்கள் கிளினர்கள் மேற் கொள்கின்றனரோ என்பதை ஒப்பந்ததாரர் பரிசோதிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பாலை இறக்கிய பின்பு பால் வண்டியை தமது சொந்த கேரேஜில் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பால் வண்டியை கழுவ பால் குளிரூட்டும் நிலையங்கள் / பால் பண்ணையில் உள்ள கேரேஜை பயன்படுத்தக்கூடாது.

45. ஒப்பந்ததாரரின் பணியாட்களோ முகவர்களோ, அல்லது வேலையாட்களோ ஒன்றியத்திற்கு எதிரான ஒழுங்கீன செயல்களில் ஈடுபடுவதோ அல்லது துணை போவதால் ஏற்படும் நட்டத்திற்கு ஒப்பந்ததாரர் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

46. ஒன்றிய அலுவலர்களின் அறிவுரைப்படி காலியான பால் கேன்கள் உரிய சங்கங்களில் இறக்கபட்டு இருக்கின்றனவா என்றும் மீண்டும் அந்த கேன்கள் பால் குளிரூட்டும் நிலையங்கள்/ பால் பண்ணையில் வந்து சேர்ந்ததா என்பதை ஒப்பந்ததாரர் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

47. எவ்வித காரணம் கொண்டும் ஒப்பந்ததாரரின் தவறுதலுக்காக இவ்வொன்றியம் பிடித்தம் செய்த தொகையை திருப்பித்தர கோரினால் அதை மறுக்க பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

48. பால் போக்குவரத்து தொடர்பாக ஒன்றியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஒப்பந்ததாரரிடமிருந்து ஒன்றியத்திற்கு வசூலிக்க வேண்டியிருந்தால் அத்தொகையானது ஒப்பந்ததாரரின் போக்குவரத்து பில்லில் அல்லது அவரின் அசையும்இ அசையா சொத்துக்கள் மூலம் வசூலிக்கப்படும். மேலும் தொகை பெறப்படும் வகையில் அரசுத்துறை மற்றும் அரசு சார்பு துறைகளில் அவர் எவ்வித ஒப்பந்தமும் மேற்கொள்ளாதவாறு நடவடிக்கை எடுத்து தடை செய்யப்படும்.

49. இவ்வொன்றிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் அலுவலக காரணங்களுக்காக ஒப்பந்த வண்டியினை பயன்படுத்தலாம். இதில் வண்டியின் ஓட்டுநர் மறுப்பு ஏதும் கூறுதல் கூடாது. அவ்வாறு மறுக்கப்பட்டால் ஏற்படும் இழப்பின் தொகையானது ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்படும்.

50. ஒப்பந்ததாரர் வண்டிக்காக செலுத்தப்படும், வனத்துறை சாலை வரி, அனுமதி செலவு மற்றும் இதர வழித்தடச் செலவுகள் ஒன்றியத்திடம் திரும்ப பெற இயலாது.

51. ஒப்பந்த வண்டியில ஆவின் ஒப்பந்த வண்டி ( On Contract with aavin dharmapuri ) என்ற வாசகம் எழுதப்பட வேண்டும். இரவு நேரங்களில் பால் கேன்களை இறக்கவும், அடுக்கவும் பால் வண்டியின் பின்புறத்தில் போதிய விளக்கொளி வசதி செய்ய வேண்டும்.

52. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை இரு பகுதி முறையில் (Two part system i.e Technical Bid and Commercial Bid) அளிக்க வேண்டும் பூர்த்தி செய்யப்பட்ட தொழில் நுட்ப படிவத்தை தனி கவரிலும் ஒப்பந்த புள்ளி படிவத்தை தனி படிவத்தை தனி கவரிலும் வைத்து இருகவர்களையும் ஒன்றாக ஒரு கவரில் வைத்து ஒட்டி முத்திரையிட்டு சமர்ப்பிக்க வேண்டும் மேலும் கவரின் மீது பால் வழிதடத்தின் பெயர், டெண்டர்தாரர் முகவரி, மற்றும் தொலைபேசி எண் தெளிவாக எழுத வேண்டும்.

52. பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து படிவங்களிலும் விண்ணப்பதாரர் முறையாக கையொப்பம் இடவேண்டும், கையொப்பம் இல்லாத மற்றும் முன்வைப்பு தொகைகான வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

53. வாகன உரிமையாளர் பெயரில் மட்டுமே ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

54. வாகனங்களுக்கான அனைத்து ஆவணங்களும் காலவதி ஆகாமல் புதுபிக்கப்பட்டு நடைமுறையில் இருக்க வேண்டும்.

55. ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை மீறி சங்கங்களின் கொள்முதல் செய்த பாலை ஒன்றியத்திற்கு எடுத்து வரும் பொழுது பாலை திருடினாலோ அல்லது முறைகேடாக நடந்து கொண்டால் அவரின் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படுவதுடன் அவரின் பாதுகாப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும். மேலும் ஒப்பந்ததாரர் எந்தவொரு டெண்டரிலும் கலந்து கொள்ளாதவாறு கருப்பு பட்டியலில் (Black- list) சேர்க்கப்படும். சுங்கங்களில் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையையும் ஒப்பந்ததாரர் வாடகை பணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

56. விண்ணப்பதாரர் இணையதளத்தில் செய்தவராக இருந்தால் ஒன்றிய போக்குவரத்து மேலாளரிடம் வாகனத்தின் தகுதி சான்றிதழ் பெற்று அதை தொழில் நூட்ப கவரில் (Technical Bid ) சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

57. ஒப்பந்ததாரர் ஒன்றியத்திற்கு எதிரான இந்தியத் தண்டனை தொகுப்பு கீழ் வரும் குற்றங்களில் எது செய்திருந்தாலும் அவர் பெயரில் குற்ற வழக்கினை மேற் கொள்ள ஒன்றியத்திற்கு உரிமை உண்டு.

58. பொது மேலாளர், தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அவர்களுக்கு எந்த ஒரு ஒப்பந்த படிவத்தையும் எவ்வித காரணங்கள் இன்றி நிராகரிக்கவோ ஏற்கவோ உரிமையுண்டு. இது தொடர்பாக பொது மேலாளர் முடிவே இறுதியானதாகும்.

59. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் தலைவர், பணிபுரியும் செயலர் மற்றும் பணியாளர் மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் இதர ஒன்றிய பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் டென்டரில் கலந்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறு கலந்துக்கொண்டால் அவர்களது டென்டர் ரத்து செய்யப்படும்.

60. ஒரு வாகன எண் ஒரு பால் வழித்தடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க பட வேண்டும். பல பால் வழித்தடத்திற்கு விண்ணப்பிக்க கூடாது. அவ்வாறு விண்ணப்பிக்கப்படின் டெண்டர் திறக்கப்படும்போது முதல் விண்ணப்பம் மட்டுமே ஏற்கபடும் மற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

61. நீதிமன்ற வழக்குகள் தருமபுரி நீதிமன்ற எல்லைக்கு உட்பட்டது.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

# உள்ளூர் பால் விற்பனை ஒப்பந்த விதிமுறைகள்.

## தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்ஒன்றியம் லிட்

## தருமபுரி .

**2022-2025 காலத்திற்கு பால் விற்பனை விநியோக வழித்தடங்களுக்கான வாடகை வண்டி ஒப்பந்த விதிமுறைகள்:**

1. ஒப்பந்தக் காலம் ஒப்பந்தம் வழங்கிய நாள்: 01.08.2022 முதல் 31.07.2025 வரை ஆகும்.
2. ஒப்பந்ததாரர் ரூ. 50/- பெறுமானமுள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்த உடன்படிக்கையின் விதிமுறைகளை தட்டச்சு செய்து கையொப்பமிட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்ட பத்து தினங்களுக்குள் இவ்வொன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும். இதன் பின்னர்தான் போக்குவரத்து பட்டியல் அனுமதிக்க இயலும்.
3. ஒப்பந்ததாரர் இவ்வொன்றியத்தில் ரூ. 10/- செலுத்தி இணை உறுப்பினராக **(Associate Member)** சேர வேண்டும். இவ்வாறு உறுப்பினராகும் ஒப்பந்ததாரருக்கு இவ்வொன்றிய தேர்தலில் வாக்களிக்கும் உரிமையோ ஒன்றிய இலாபத்தில் பங்கோ வழங்கப்படமாட்டாது. இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரமாட்டாது.
4. வேன் மினிவேன் (லாரி) ஒப்பந்தம் கோரும்போது கீழ்கண்டவாறு முன்வைப்புத்தொகை செலுத்த வேண்டும்.

| | முன்வைப்புத்தொகை (EMD) |
|---|---|
| 2.0 டன் முதல் 2.5 டன் வரை | ரூ.7,500.00 |
| 0.75 டன் முதல - 1.5 டன் வரை | ரூ.5,000.00 |

மூடி முத்திரையிடப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் முன்வைப்புத் தொகையை வரைவு காசோலையாகவோ அல்லது பணமாகவோ செலுத்த வேண்டும். ஒப்பந்தம் கிடைக்கப்பெற்ற பின்னர் மீதம் செலுத்த வேண்டிய காப்புத் தொகை போக்குவரத்துக் கட்டணப் பட்டியலில் இருந்து இரு சம தவனையில் பிடித்தம் செய்துக்கொள்ளப்படும். மேலும் தங்களின் செயல்பாட்டினை முழுமையாக ஊர்ஜிதப்படுத்தும் பொருட்டு வைப்புத்தொகை ( Performance Deposit) ஒவ்வொரு போக்குவரத்து பட்டியலுக்கும் ஏற்ப 1 ( ஒரு) சதவீதம் பிடித்தம் செய்யப்படும். இத்தொகை திருப்தியான ஒப்பந்தக் காலத்தை முடித்திருக்கும் ஒப்பந்தாரருக்கு இறுதிப்பட்டியலுடன் சேர்த்து வழங்கப்படும்.

5. ஒப்பந்தாரர் செலுத்தும் முன் வைப்பு தொகை (EMD) மற்றும் பிணையத்தொகைக்கு ( SD) வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.
6. ஒன்றிய ஒப்பந்த விதிமுறைகள் ஒப்பந்ததாரர் பின்பற்றாமல் செயல்பட்டாலும், ஒன்றியம் மற்றும் சங்க சொத்துகளுக்கு சேதம் மற்றும் இழப்பு ஏற்படுத்தினாலும் காப்புத்தொகை மற்றும் இதர தொகையில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ நட்டத்திற்கு ஏற்ப ஈடு செய்யப்படும். மேலும் உடனடியாக ஒப்பந்தத்தை இரத்து செய்யவும் ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்தாரர் ஒன்றியம் அங்கீகரித்துள்ள தடத்தின் வழியிலும், ஒன்றிய அலுவலரால் சுட்டிக்காட்டப்படும் வழியில் மட்டுமே ஒப்பந்த வாகனத்தை இயக்க வேண்டும். மேலும் ஒன்றியம் வரைறை செய்துள்ள தடத்தில், குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் சென்றடைய வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட தடத்தொலைவை நீட்டவும் குறைக்கவும் தடத்தை மாற்றி அமைக்கவும் அல்லது இரத்து செய்யவும் ஒன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.
9. மோட்டார் வாகன சட்டத்திற்கு உட்பட்டு தேவைப்படும் ஆவணங்கள் டிரிப்சீட் பராமரிப்பது மற்றும் இதர அனைத்து ஆவணங்களை பராமரிப்பது முழு பொறுப்பும் ஒப்பந்தாரரையே சாரும். இதில் அரசின் மற்றும் போக்குவரத்து அலுவலரின் எவ்வித மேல் நடவடிக்கைகளுக்கும் ஒன்றியம் பொறுப்பேற்காது.
10. வாகனத்தின் உதிரிபாக விலை உயர்வு, வாகன வரி உயர்வு ஆகிய விலை உயர்வுகள் ஏற்பட்டாலும், அங்கீகரிக்கப்பட்ட வாடகை உயர்தப்படமாட்டாது.
11. ஒப்பந்ததாரருக்கு பால் விற்பனை மையங்களுக்கும், முகவர்களுக்கும் மற்றும் ஒன்றியத்திற்கு இடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்கு பொது மேலாளரின் தீர்ப்பே இறுதியானது.
12. ஒப்பந்ததாரர் தமது வாகனங்களுக்கு குறைந்த பட்சம் மூன்றாமவர் காப்பீடு ( Third Party Insurance) செய்யப்பட்டிருக்க வேண்டும்.
13. மோட்டார் வாகன விதிகளின்படி சொந்த வாகனம் ( Own Board) பயன்படுத்தக்கூடாது. ஆதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.
14. அமுலில் உள்ள விதிகளின்படி வருமான வரி ஒவ்வொரு போக்குவரத்து கட்டண பட்டியலிலும் பிடித்தம் செய்யப்படும்.
15. போக்குவரத்துக்கட்டணப் பட்டியலை ஒப்பந்ததாரர் 1 முதல் 5 - ம் தேதி வரையும் 16- ம் தேதி முதல் மாத இறுதிவரையாக மாதமிருமுறை பட்டியல்கள் மூன்று நகல்களுடன் டிரிப்சீட் இணைத்து உரிய அலுவலரின் பரிந்துரையுடன் 5 தினங்களுக்குள் இவ்வொன்றியத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.
16. பொது வேலை நிறுத்தம் நடைபெறும் நாட்களில் ஒப்பந்தாரர் எவ்வித இழப்பு ஏற்பட்டாலும் ஒன்றியம் எவ்வித நட்ட ஈட்டுத்தொகையும் வழங்காது.

17. ஒப்பந்த காலத்தை நல்ல முறையில் இயக்கி முடித்த ஒப்பந்தாரருக்கு ஒப்பந்தம் முடிந்த பின் தங்களின் காப்புத்தொகையில் 50 முதல் 75 சதவீதம் வழங்கப்படும். மீதமுள்ள தொகை ஒன்றியத்தின் தணிக்கை முடிந்த பிறகு திருப்பி வழங்கப்படும்.
18. ஒப்பந்தாரர் ஒப்பந்த காலம் முடிந்தவுடன் ஒப்பந்தம் சார்ந்துள்ள அலுவலரிடம் நிலுவையில்லாச்சான்று ( No due Certificte) பெற்று ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும். இதன் பிறகு கடைசி போக்குவரத்துக்கட்டணம் அனுமதிக்கப்படும்.
19. நிர்வாகக்காரணங்களுக்காக எவ்வித முன் அறிவிப்புமின்றி ஒப்பந்தத்தை இரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
20. ஒப்பந்தத்திலிருந்து முன் அறிவிப்பு ஏதுமின்றி திடீரென்று ஒப்பந்த வண்டியை நிறுத்திக்கொண்டால். ஒன்றியத்தின் ஒப்பந்த விதிமுறைகளை ஒப்பந்தாரர் செயல்படுத்தாமைக்கா ஒப்பந்தம் இரத்து செய்து கீழ் காணும் விதிமுறைகளை ஒன்றியம் பின்பற்றும்.
    (அ) அனைத்து வைப்புத்தொகைகளும் பறிமுதல் செய்யப்பட்டு ஒன்றியக்கணக்கில் வரவு வைக்கப்படும்.
    (ஆ) நிலுவையில் உள்ள அனைத்து போக்குவரத்து கட்டணங்களும் முடக்கி வகைக்கப்படும்.
    (இ) மாற்று வாகனம் எற்பாடு செய்த வகையில் இவ்வொன்றியத்திற்கு ஏற்படும் அதிகப்படியான மற்றும் ஒன்றியத்திற்கு ஏற்பட்ட அனைத்து செலவுகளும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
21. ஒப்பந்த வண்டியின் தொலைவு காட்டும் கருவி ( Speedo metre) சரியாக இயங்க வேண்டும் தொலைவு காட்டும் கருவி இயங்காத நிலையில் வண்டியில் பயணம் செய்யும் ஒன்றிய அலுவலர் தெரிவிக்கும் தொலைவின் அடிப்படையில் மட்டுமே போக்குவரத்துக்கட்டணம் வழங்கப்படும்.
22. ஒன்றிய அலுவலர்கள் குறிப்பிடும் இடத்தில் குறிப்பிடும் நேரத்தில் ஒப்பந்ததாரர் தமது வாகனத்தை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்த வாகனத்திற்கு பதிலாக மாற்று வாகனம் அமர்த்தப்பட்ட அதே பணிக்காக பயன்படுத்தும்போது மாற்று வாகனம் அமர்த்த செலவிடப்பட்ட அதிகப்படியான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
23. ஒப்பந்த வண்டி பழுதடைந்தாலோ விபத்துக்குள்ளானாலோ தகுதி சான்று ( FC) பெறவேண்டி இருந்தாலோ ஒப்பந்தாரர் தம் பொறுப்பில் மாற்று வாகனம் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். அவ்வாகனம் ஒப்பந்த சரத்துக்களின்படி இருக்க வேண்டும்.
24. மாற்று வாகனம் பயன்படுத்துவதற்கு ஒன்றியத்தின் முன் அனுமதியை ஒப்பந்தாரர் பெறவேண்டும். அதிக அளவில் 15 தினங்களுக்கு மட்டுமே மாற்று வாகனம் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

25. ஒன்றிய பணிக்காக வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது வண்டியில் வெளி ஆட்களையோ ஒன்றியம் அனுமதிக்காத பொருட்களையோ ஏற்றக்கூடாது. இவ்வாறு செய்தால் அன்றைய நாள் வாடகை இரத்து செய்யப்படு.
26. ஒப்பந்தாரரின் ஒப்பநத வாகனத்தில்பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும், நிரந்தரம் (அ) தற்காலிகமாகவோ குறைந்தபட்சமாக ஒரு நாள் ஊதியம் பெற்றவாராயினும் வருங்கால வைப்புநிதி திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும் என்பது சட்ட பூர்வமானதாகும். ஓப்பந்தாரர் வாகனத்தில் பணிபுரியும் ஓட்டுனர் மற்றும் துப்புரவாளர்களின் ஈ.பி.எப். (EPF) மற்றும் ஈ.எஸ்.ஐ (ESI) ஆகியவைகளை ஊதியத்தில் பிடிப்பதால் அப்பணியாளர்களின் பெயர் , முகவரி, பிறந்த தேதி மற்றும் அவர்களுக்கு வழங்கும் ஊதியம் ஆகிய விவரங்கள் அந்தந்த மாத பட்டியலுடன் இணைத்து அனுப்பிய பின்னரே பட்டியல் தொகை வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட வாகனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மாநில காப்பீட்டு திட்டப்பிரிவு 40 (1) மற்றும் (3) எங்கெல்லாம் அமல்படுத்தப்படுகிறதோ, அங்கெல்லாம் மேற்படி திட்டத்தின் கீழ் கொண்டு வந்த மாதாமாதம் அதற்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும் அனைத்து வழித்தடங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் பாலிசி எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒன்றியமே போக்குவரத்து கட்டணத்தில் பிடித்தம் செய்து செலுத்தப்படும்.
27. டெண்டர்தாரருக்கு ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு அல்லது குறைவு ஏற்படும்போது ஒன்றிய நிர்வாக குழுவின் முடிவின்படி ஒப்பந்த காலத்தில் அனுமதிக்கப்பட்ட வாடகை விகித்தை உயர்த்தவோ குறைக்கவோ பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு.
28. மேற்படி ஒப்பந்த விதிகள், தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தம் 1998-ம் ஆண்டு சட்டம் 43 (ACT) மற்றும் அதைத் தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் ( Rules) ஆகியவற்றிற்கு உட்பட்டதாகும்.
29. ஒவ்வொரு வழித்தடத்திற்கும் தனித்தனி ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப படிவம் பெறுதல் வேண்டும். எந்த வழித்தடத்திற்கு விண்ணப்படிவம் பெறப்பட்டதோ அவ்வழித்தடத்திற்கு மட்டும்தான பயன்படுத்தப்பட வேண்டும்.
30. ஒவ்வொரு முறையும் பால் இறக்குதல் பாதுகாவலர் ஊழியர்களால் பால் வண்டியின் வருகை மற்றும் வெளி செல்லும் நேரங்கள் பதிவு செய்து கொள்ளப்படும். சிறப்பான முறையில் வண்டியினை நடத்தும் நேரத்தை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.
31. ஒப்பந்தாரர் தனது சொந்த ஆட்களைக் கொண்டு பால் டப்புகள் கேன்களை எடுத்து செல்வதும் மீண்டும் பால் பண்ணைக்கு எடுத்து வருதல் வேண்டும்.
32. நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்த காலத்தை நீட்டிக்கவோ குறைக்கவோ பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. ஒப்பந்த காலம் முடிந்தபிறகு மேலும் 3 மாத காலம் வரை நீட்டிப்பு செய்ய பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. மேலும் ஒப்பந்தாரல்

தொடர்ந்து ஒன்றியத்திற்கு நட்டம் ஏற்படுத்துவாரேயானால் அவருடைய ஒப்பந்தம் இரத்து செய்வதுடன் ஒன்றியத்திற்கு ஏற்பட்ட அனைத்து நட்டமும் வசூலிக்கப்படும்.

33. புதிய விற்பனை மையம் ஆரம்பித்தால், வழித்தடத்தை மாற்றி அமைத்தல் போன்ற காரணங்களால், பால் விற்பனை வழித்தடத்தின் தூரம் நிலையாக இல்லாமல் மாறி வரும். அவ்வாறான சமயங்களில் ஒப்பந்ததாரர் தனது வண்டியை ஓட்டதயார் நிலையில் இருக்க வேண்டும். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள தூரத்தை தவிர அதிகப்படியான தூரத்திற்கு வண்டியை இயக்க நேரிட்டால் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்ட விலைப்புள்ளி தொகை தான் அளிக்கப்படும். இந்த நிபந்தனை பால் விற்பனை வழித்தட மாற்று ஏற்பாட்டின் போதும் பொருந்தும்.
34. ஒன்றியம் அவ்வப்போது அறிவிக்கும் வகையில் வண்டியின் வண்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும். குழிகள் இல்லாத அடித்தளத்தை கொண்டிருக்க வேண்டும். ஒன்றியம் அவ்வப்போது வழங்கும் கடிதம், பால் பொருட்கள் முதலியவைகளை குறிப்பிட்ட இடங்களில் எவ்விதமான சேதாரமும் இன்றி கொண்டு சேர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்ய மறுத்தால் அது ஒப்பந்த உடன்படிக்கையை மீறியதாக கருதி ஒப்பந்தம் முடிவு செய்து கொள்வதோடு காப்புத்தொகை பிடித்தம் செய்து கொள்ளப்படும்.
35. பால் விற்பனை வழித்தடத்தில் பால் விற்பனை வழித்தடம் மற்றும் விநியோக வழித்தடம் வண்டியானது பழுதடைந்து நின்றுவிட்டாலோ ஓட்ட முடியாத நிலையில் இருந்தாலோ அவசரம் கருதி தற்காலிகமாக மாற்று வண்டியை ஏற்பாடு செய்து கொள்வது ஒப்பந்தாரரின் பொறுப்பாகும். மாறாக இவ்வொன்றியம் எவ்விதமான ஏற்பாடும் செய்ய இயலாது.
36. வண்டியின் கால தாமதத்தால் பால் கெட்டுப்போனாலோ, அல்லது சேதம் அடைந்தாலோ அந்த பாலுக்குண்டான தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
37. ஒப்பந்தம் அவ்வப்போது அறிவிக்கும் அறிவுரைகளை பால் வண்டியின் ஓட்டுநர்கள் கிளீனர்கள் மேற்கொள்கின்றனரா என்பதை ஒப்பந்தாரர் பரிசோதிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் பாலை இறக்கிய பின்பு, பால் வண்டியை தமது சொந்த கேரேஜில் கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பால் வண்டியை கழுவ பால் பண்ணையில் உள்ள கேரேஜை பயன்படுத்தக்கூடாது .
38. ஒன்றியம் முடிவு செய்யும் தருவாயில் இவ்வொன்றியத்தில் ஒப்பந்தாரரின் கடந்த கால வியாபார உறவு கருத்தில் கொள்ளப்படும். இதில் பொது மேலாளரின் முடிவே இறுதியானது.
39. ஒப்பந்தாரரின் பணியாட்களோ முகவர்களோ அல்லது வேலையாட்களோ ஒன்றியத்திற்கு எதிரான ஒழுங்கீன செயல்களில் ஈடுபடுவதோ அல்லது துணை போவதால் ஏற்படும் நட்டத்திற்கு ஒப்பந்தாரர் முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

40. எவ்வித காரணம் கொண்டும் ஒப்பந்தாரரின் தவறுதலுக்காக இவ்வொன்றியம் பிடித்தம் செய்த தொகையை திருப்பி தர கோரினால் அவை மறுக்க பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.
41. பால் விற்பனை போக்குவரத்து தொடர்பாக ஒன்றியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஒப்பந்தாரரிடமிடருந்து ஒன்றியத்திற்கு வசூலிக்க வேண்டியிருந்தால் அத்தொகையானது ஒப்பந்ததாரின் போக்குவரத்து பில்லில் அல்லது அவரின் அசையும் சொத்துக்கள் மூலம் வசூலிக்கப்படும். மேலும் தொகை பெறப்படும் வகையில் அரசுத்துறை மற்றும் அரசு சார்பு துறைகளின் உதவியுடன் அவர் எவ்வித ஒப்பந்தமும் மேற்கொள்ளாதவாறு நடவடிக்கை எடுத்து தடை செய்யப்படும்.
42. இவ்வொன்றிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் அலுவலக காரணங்களுக்காக ஒப்பந்த வண்டியினை பயன்படுத்தலாம். இதில் வண்டியின் ஓட்டுநர் மறுப்பு ஏதும் கூறுதல் கூடாது. அவ்வாறு மறுக்கப்பட்டால் ஏற்படும் இழப்பினை தொகையானது ஒப்பந்தாரரிடம் பிடித்தம் செய்யப்படும்.
43. ஒப்பந்தாரர் வண்டிக்காக செலுத்தப்படும் வனத்துறை சாலை வரி அனுமதி செலவு மற்றும் இதர வழித்தடச்செலவுகள் ஒன்றியத்திடம் திரும்பப் பெற இயலாது.
44. ஒப்பந்த வண்டியில் " ஆவின் ஒப்பந்த வண்டி " ( on contract with Aavin - Krishnagiri / Dharmapuri) என்ற வாசகம் எழுதப்படவேண்டும். இரவு நேரங்களில் பால் கேன்கள் / டப்புகள் இறக்கவும் அடுக்கவும் பால் வண்டியின் பின்புறத்தில் போதிய விளக்கொளி வசதி செய்ய வேண்டும்.
45. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை இரட்டை கவர் முறையில் ( Two cover system, i.e. one cover of Technical Bid and and another cover for commercial bid) அளிக்க வேண்டும்.
46. ஒப்பந்தம் சம்மந்தமாக அனைத்து பிரச்சனைகளிலும் பொது மேலாளர் முடிவே இறுதியானது ஆகும்.
47. ஒப்பந்ததாரர் ஒன்றியத்திற்கு எதிரான இந்தியக்குற்றத் தண்டனை விதித்தொகுப்பு கீழ் வரும் குற்றங்களில் எது செய்திருந்தாலும் அவர் பெயரில் குற்ற வழக்கினை மேற்கொள்ள ஒன்றியத்திற்கு உரிமை உண்டு.
48. பொது மேலாளர் தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அவர்களுக்கு எந்த ஒரு ஒப்பந்த படிவத்தையும் எவ்வித காரணங்கள் இன்றி நிராகரிக்கவோ ஏற்கவோ உரிமை உண்டு.
49. அனைத்து நீதிமன்ற வழக்குகள் தருமபுரி மாவட்டம் தருமபுரி வழக்கு நீதி மன்றத்திற்கு உட்பட்டது.

50. சாதராாண வண்டி உள்ளவர்கள் பால் விற்பனை வழித்தடத்திற்கு டெண்டரில் கலந்து கொள்ளலாம். உத்திரவு கொடுத்த 30 நாட்களுக்குள் Puff Van ஆக மாற்றி வாகனத்தை இயக்க வேண்டும். மேலும் சாதாரண வண்டி இயக்கும் காலத்திற்கு சாதாரண வண்டி வாடகையே தரப்படும்.

51. இன்சுலேடட் செய்யப்பட்ட பப் வண்டி கோரதப்பட்டுள்ள வழித்தடத்தில் ஓட்ட வேண்டும் அவ்வாறு ஓட்ட தவறின் தண்டத்தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.100/- ஒன்றியத்திற்கு வழங்க வேண்டும். மேலும் பால் கெட்டுப்போனால் அதற்கான தொகையும் வசூல் செய்யப்படும். தண்டத் தொகை வசூல் செய்ய பொது மேலாளருக்கு முழு உரிமையும் அதிகாரமும் உண்டு.

52. ஒரு வாகன எண் ஒரு பால் வழித்தடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க பட வேண்டும். பல பால் வழித்தடத்திற்கு விண்ணப்பிக்க கூடாது. அவ்வாறு விண்ணப்பிக்கப்படின் டெண்டர் திறக்கப்படும்போது முதல் விண்ணப்பம் மட்டுமே ஏற்கபடும் மற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

## THE DHARMAPURI DIST CO-OP MILK PRODUCERS UNION LTD, DHARMAPURI

## TENDER NOTICE

Sealed Tenders (Two cover system) are invited from the Lorry owners for transporting of milk from Rural Milk Co-operative Societies to Bulk Milk Cooling centers of Dharmapuri District and Local sales milk transport in Hogenakkal Route.

Transportation of milk from Rural Milk Co-operative Societies to Bulk Milk Cooling centers of Dharmapuri District – 38 Mini Lorries (with Tarpallin Closed) and Local sales milk transport in Hogenakkal Route Local Sales milk (1 Puff van). Tender period for the year 2022-2025 (from the date of issue of order for three years) and cost of tender form is Rs.200/- (inclusive of tax). Tender forms can be received from this office during the office hours upto 28.06.22 by 4.00 PM at the Administrative Office, Dharmapuri Dist. Co-op Milk producers Union Ltd, Dharmapuri, Phone Number: 9487332679. Last date for submission of filled in tender forms up to 29.06.2022 by 2.00 PM and the same will be opened before the tender committee. Tender forms and other details can also be downloaded at https://tntenders.gov.in/ on free of cost.

Sd/Dr.K.K.Vashanthakumar

General Manager

for General Manager